கூட்டம் எண்.16 செங்கல்பட்டு நகராட்சி

நாள்.06.07.2024

<u>குறள் :</u> செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்.

<u>தெளிவுரை</u>: நூலறிவால் செயல்களைச் செய்ய அறிந்த போதிலும் உலகத்தின் நடைமுறைகளையும் அறிந்து அதனோடு பொருந்துமாறு செய்ய வேண்டும்.

## சாதாரணக் கூட்டம்

**2024–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் தேதி (10.07.2024) முற்பகல் 11.00 மணிக்கு செங்கல்பட்டு நகராட்சி வேதாசலம் கட்டிடத்தில் சாதாரண கூட்டம் நகரமன்ற தலைவர் திருமதி.தேன்மொழி நரேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அது சமயம் துணைதலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

ந.அன்னமணி 6/7/24
நகரமன்ற தலைவர்
செங்கல்பட்டு நகராட்சி

**பொருள் எண்– 1**

பிப்ரவரி முதல் மே வரை– 2024 மாதத்திற்கான வரவு செலவு கணக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரவு | செலவு |
|---|---|
| **பிப்ரவரி – 2024** | |
| பொது நிதி மூலம் = ரூ.16249882 /– | பொது நிதி மூலம் = ரூ.27594923/– |
| குடிநீர் நிதி மூலம் = ரூ.286194/– | குடிநீர் நிதி மூலம் = ரூ.2085356/– |
| கல்வி நிதி மூலம் = ரூ.78838/ – | கல்வி நிதி மூலம் = – |
| **மார்ச் – 2024** | |
| பொது நிதி மூலம் = ரூ.171583005/– | பொது நிதி மூலம் = ரூ.134060693/– |
| குடிநீர் நிதி மூலம் = ரூ.33583607/– | குடிநீர் நிதி மூலம் = ரூ.5690028/– |
| கல்வி நிதி மூலம் = ரூ.8911923/ – | கல்வி நிதி மூலம் = ரூ.9331902/– |
| **ஏப்ரல் – 2024** | |
| பொது நிதி மூலம் = ரூ.606165/– | பொது நிதி மூலம் = ரூ.17526086/– |

| | |
|---|---|
| குடிநீர் நிதி மூலம் = ரூ.**116517/–** | குடிநீர் நிதி மூலம் = ரூ.**2982409/–** |
| கல்வி நிதி மூலம் = ரூ.**85833/ –** | கல்வி நிதி மூலம் = ரூ.**–41823/–** |
| **மே – 2024 வரவு** | **செலவு** |
| பொது நிதி மூலம் = ரூ.**545061/–** | பொது நிதி மூலம் = ரூ.**17322711/–** |
| குடிநீர் நிதி மூலம் = ரூ.**66859/–** | குடிநீர் நிதி மூலம் = ரூ.**860531/–** |
| கல்வி நிதி மூலம் = ரூ.**13098.55/ –** | கல்வி நிதி மூலம் = ரூ.**13879.55/–** |

**அலுவலக குறிப்பு–**

மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.402 நாள்.10.07.2024**

பின்னேற்பு வழங்கப்பட்டது.

**பொருள் எண்.2**

**நகரமைப்பு பிரிவு–** மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களின் 2022–2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் போது கீழ்காணும் அறிவிப்பு செய்யப்பட்டது.

**சாலையோர வியாபாரிகளுக்கானத் திட்டம் (Street Vendors Welfare)**

தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்கப்பட்டு அவர்கள் எவ்வித சிரமமும் இன்றி, வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA1, நாள்.16.06.2022ல், தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015–ன் படி கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச்சான்று தயார் செய்து வழங்குதல் மற்றும் விற்பனைத்திட்டம் தயார் செய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனக்கோரப்பட்டதைத் தொடர்ந்து இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு நடைபெற்றதில், மொத்தம் 1276 நபர்கள் உள்ளனர் எனக் கண்டறியப்பட்டு, மேற்படி நபர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச்சான்றும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA, நாள்.07.06.2024ல் தற்போது தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்புப்பணி முடிவுற்றதால்,

தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் விதிகள் 2016, அத்தியாயம் IV–ன் படி நகர விற்பனைக்குழு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் விற்பனையினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015, அத்தியாயம் IV, –ன் படி நகர விற்பனைக்குழு அமைக்கப்படவேண்டும். நகர விற்பனைக்குழுவில் தலைவருடன் சேர்த்து மொத்தம் 15 உறுப்பினர்கள் அடங்குவர்.

| **நகராட்சி ஆணையர்** | **–** | **1 (தலைவர்)** |
|---|---|---|
| மருத்துவ அலுவலர் | – | 1 |
| காவல் அலுவலர்கள் (போக்குவரத்து காவல் அலுவலர் உள்பட) | – | 2 |
| நகராட்சியின் ஏதேனும் ஒரு அலுவலர் | – | 1 |
| தெருவோர வியாபாரிகளின் பிரதிநிதிகள் | – | 6 |
| வணிகர் சங்கப்பிரநிதிகள் | – | 1 |
| அரசு சாரா மற்றும் சமூதாய அமைப்பின் பிரதிநிதிகள் | – | 2 |
| குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகள் | – | 1 |

மேற்கண்ட 15 உறுப்பினர்களில் 9 உறுப்பினர்களை (தெருவோர வியாபாரிகள் தவிர்த்து) சம்மந்தப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும், மீதம் உள்ள 6 உறுப்பினர்களை மட்டும் கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ள தெருவோர வியாபாரிகள் 1276 நபர்களுக்கிடையே தேர்தல் நடத்தி தேர்தல் மூலம் 6 உறுப்பினர்களை தேர்வு செய்யவேண்டும் எனவும், அவர்களை கீழ்காணும் விவரப்படி தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | தாழ்த்தப்பட்டோர் வகுப்பினர் | – | 1 |
| 2 | பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் | – | 1 |
| 3 | மகளிர் வகுப்பினர் | – | 1 |
| 4 | மாற்றுத் திறனாளி வகுப்பினர் | – | 1 |
| 5 | சிறுபான்மையினர் வகுப்பினர் | – | 1 |
| 6 | பொது பிற வகுப்பினர் | – | 1 |

மேலும் மேற்கண்ட தேர்தல் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் குறித்து நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என மேற்கண்ட விதிகளில் விதி எண்.13(3)–ல்

குறிப்பிடப்பட்டுள்ளது. நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றிய பின்பு தேர்தல் நடத்தி அதன் மூலம் 6 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நகர விற்பனைக்குழுவில் இடம் பெறவுள்ள 6 தெருவோர வியாபாரிகளை உறுப்பினர்களாக தேர்வு செய்வதற்கான தேர்தலை கீழ்காணும்படி நடத்த நகர்மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

**தேர்தல் நடைபெறும் இடம்– நகராட்சி அலுவலகம் செங்கல்பட்டு**

| தேர்தல் விவரப்பட்டியல் | | நாள் | நேரம் |
|---|---|---|---|
| தேர்தல் அறிவிக்கை வெளியிடுதல் | – | 12.07.2024 | |
| வேட்பு மனுக்கள் பெறுதல் | – | 15.07.2024 | காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை |
| வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் | – | 23.07.2024 | காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை |
| வேட்பு மனுக்கள் பரிசீலனை | – | 24.07.2024 | காலை 11 மணி முதல் |
| வேட்பு மனுக்கள் வாபஸ் பெறுதல் | – | 25.07.2024 | பிற்பகல் 5 மணி வரை |
| வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிடும் நாள். | – | 25.07.2024 | |
| வாக்குப்பதிவு நடைபெறும் நாள் | – | 02.08.2024 | காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை |
| வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள் | – | 02.08.2024 | மாலை 5 மணிக்கு நடைபெறும் |

**அலுவலக குறிப்பு–**

1. மேற்குறிப்பிட்ட அட்டவணையின்படி தேர்தல் நடத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தேர்தல் தொடர்பாக ஆகும் செலவினங்களை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினங்களை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.2524/2016/எப்1)**

**தீர்மான எண். 403, நாள்.10.07.2024**

அலுவலக குறிப்பு 1 முதல் 3 வரை அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

**நகரமைப்பு பிரிவு–** செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜே.சி.கே நகர், மல்லிகை தெருவில் மனை எண்.30ன் முன்புறம் உள்ள ஆக்கிரமிப்பை நகராட்சி மூலம் அகற்றியதற்கு திரு.தனசேகரன் என்பவர் நகராட்சி ஆணையாளர், செங்கல்பட்டு அவர்களை 5–வது பிரிதிவாதியாக்கி சென்னை உயர்நீதிமன்றத்தில் WP No.36009/2023ல் வழக்கு தொடுத்தமைக்கு நகராட்சி சார்பில் திரு. P.சீனிவாஸ், சென்னை உயர்நீதி மன்றத்தில் ஆஜராகி நகராட்சி சார்பில் உரிய எதிர்வாதுரை தாக்கல் செய்து வழக்கினை நடத்தி முடித்து

கொடுத்தமைக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.18,000– வழங்க கோரியுள்ளார். மேற்படி வழக்கறிஞர் கட்டணம் ரூ.18,000/– வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

சென்னை உயர்நீதிமன்ற வழக்கு WP No.36009/2023 வழக்கு சம்மந்தமாக நகராட்சி சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கினை நடத்தி முடித்து கொடுத்தமைக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.18,000/– வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.34/2023/எப்1)**

**தீர்மான எண்.404, நாள்.10.07.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

செங்கல்பட்டு நகராட்சியில் பொதுப்பிரிவு **2023–2024** ஆண்டிற்கு தணிக்கை முடிவு பெற்று தணிக்கை அறிக்கை தயார் செய்ய (Revenue Fund, Water Supply and Elementary Education Fund) டைப்பிங் பிரிண்டிங் மற்றும் பைண்டிங் செய்வதற்கு உள்ளூர் விலைப்புள்ளி கோருவதற்கும் தோராய செலவினம் ரூ.**2.00** இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.2254/2022/பி1)**

**தீர்மான எண். 405, நாள்.10.07.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

இந்நகராட்சியில் ஒப்பந்ததாரர்களின் பில் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் GST, TDS மற்றும் IT – TDS E-Filling மாதாமாதம் (திரு.செந்தில்குமார்) M/S Challenger consultancy சென்னை என்ற நிறுவனம் மூலம் File செய்யப்பட்டு வருகிறது. அன்னாருக்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தொகை ரூ.17,500/– என வழங்கப்பட்டு வருகிறது. தற்போது **2023 – 2024**ற்கு அக்டோபர் **2022** முதல் மார்ச் **2023** வரையில் ரூ.35,000 /–ம் **(17,500X2 = 35,000)** மற்றும் **2024–2025**ற்கு **(17,500X4 = 70,000)** என மொத்தம் ரூ.1,05,000/–ஐ மேற்படி நிறுவனத்தின் மூலம் செயல்படுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.23/2019/பி1**

**தீர்மான எண். 406, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண் –6**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டம் (SBM) 7th SHCP 2023-24ன் கீழ்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அப்பணிக்கு **10.06.2024** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் பின்வருமாறு.

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்)** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்** |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7ல் பச்சையம்மன் கோவில் பகுதியில் சமுதாய கழிப்பிடம் (Community Toilet) கட்டும் பணி. | ரூ.9.00 இலட்சம் | திரு.K.வெங்கடேசலு | –0.06% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.G.ராஜேஷ் | 0.11% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21ல் ராமபாளையம் பகுதியில் சமுதாய கழிப்பிடம் (Community Toilet) கட்டும் பணி. | ரூ.9.00 இலட்சம் | M/s.MSD Construction | –0.07% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.S.செந்தில்வேல் | 0.15% மதிப்பீட்டை விட அதிகம் |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. திட்ட பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**ந.க.எண்.389/2024/இ1**

**தீர்மான எண்.407 நாள்.10.07.2024**

அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–7**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 16 வரை உள்ள குடிநீர் பகிர்மான குழாய், பிரதான குழாய் (90mm dia Pvc. 150mm, 200mm, 250mm and 300mm dia) மற்றும் 800mm முதல் 300mm வால்வுகள் 2024–25 ஆண்டிற்கு பராமரிப்பு செய்திட மதிப்பீட்டுத் தொகை ரூ.12.00 இலட்சத்திற்கும், பணியினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.001114/2024/இ1

**தீர்மான எண். 408, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–8**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 முதல் 33 வரை உள்ள குடிநீர் பகிர்மான குழாய், பிரதான குழாய் (90mm dia Pvc, 150mm, 200mm, 250mm and 300mm dia) மற்றும் நீர்தேக்க தொட்டிகளில் உள்ள வால்வுகள் பழுதுகள் உடைப்புகள் 2024 – 2025 ஆண்டிற்கு பராமரிப்பு செய்திட மதிப்பீடு தொகை ரூ.12.00 இலட்சத்திற்கும் பணியினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.001116/2024/இ1

**தீர்மான எண். 409, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–9**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 16 வரை உள்ள பகுதிகளில் ஆழ்துளை கிணறு, திறந்தவெளி கிணறுகளில் உள்ள மின்விசை பம்புகள் மற்றும் சிறுமின் விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை ஆண்டு (2024–25) பராமரிப்பு முறையில் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.8.00 இலட்சத்திற்கும் தயார் செய்து பணியினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.001115/2024/இ1

**தீர்மான எண். 410, நாள். 10.07.2024**
அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–10**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 முதல் 33 வரை உள்ள ஆழ்துளை கிணறு, சிறு மின்விசை பம்புகள், திறந்த வெளி கிணறு மின் விசை பம்புகள் (2024–25) ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.8.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்து பணியினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.001117/2024/இ1

**தீர்மான எண். 411, நாள். 10.07.2024**
அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–11**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மாமண்டூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்துளை கிணறுகள் உறுஞ்சும் கிணறுகளில் இருந்து மின் மோட்டார் மூலம் குடிநீர் கொண்டு வரப்பட்டு சம்பு நிரப்பப்படுகிறது. மேலும் சம்பில் உள்ள குடிநீர் தினந்தோறும் திரவ நிலை குளோரின் (Gas Chlorine) கலக்கப்பட்டு நகரின் பிரதான நீர்தேக்க தொட்டிகளில் நிரப்பப்படுகிறது. இப்பணிக்கு (2024 – 25) ஆண்டு பராமரிப்பு ரூ.3.40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு குடிநீர் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 412, நாள். 10.07.2024**
அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–12**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான பழவேலி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள இரண்டு சம்புகள் நிரப்பப்பட்டு ரேடியோமலை நீர்தேக்க தொட்டிகள், பாசித்தெரு நீர்தேக்க தொட்டி மற்றும் தட்டான் மலை நீர்தேக்க தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நீரேற்று நிலையத்தில் சம்புகளில் வாயு நிலை குளோரின் (Gas Chlorination) கலந்து குடிநீர் விநியோகம் செய்யும் ஆண்டு பராமரிப்பு பணிக்கு (2024–25) மதிப்பீடு தொகை ரூ.6.80 இலட்சத்திற்கும் பணியினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு—**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.413, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்—13**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பழவேலி நீரேற்று நிலையத்தின் சேகரக்கிணற்றிலிருந்து (Collection Well) ரேடியோ மலை நீர்தேக்க தொட்டிக்கு இயக்கப்படும் 75 HP மோனோ பிளாக் (Unit II) மின்மோட்டார் காயில் பழுது காரணமாக மின்மோட்டாரை இயக்க முடியவில்லை. அதன் காரணமாக குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. எனவே பழுதடைந்த மின்மோட்டரை சரி செய்யவும் அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.1.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு—**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 414, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்—14**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24ல் உள்ள ராதாகிருஷ்ணன் தெருவில் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு பயனற்ற நிலையில் உள்ள ராதாகிருஷ்ணன் தெரு கிழமேல் சாலை சந்திப்பிலிருந்து அண்ணாநகர் சாலை வரை உள்ள காங்கீரிட் சாலை புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளுமாறு நகரமன்ற உறுப்பினர் அவர்கள் மனு மூலம் கோரியுள்ளார்கள். மேற்படி சாலையினை நகர்மன்ற தலைவர் அவர்கள், ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர்கள் நேரடி ஆய்வு செய்து புதிய சிமெண்ட் சாலையினை அமைக்க உத்திரவிட்டுள்ளதன் அடிப்படையில் மேற்படி சிமெண்ட் சாலையினை புதுப்பித்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.3.90/— இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு—**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.415, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்—15**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.25ல் அண்ணா நகர் முதல் பிரதான சாலையில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடத்திற்கு பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் தேவையான பொருட்கள் வாங்கி பொருத்துமாறு நகரமன்ற உறுப்பினர் அவர்கள் மனு மூலம் கோரியுள்ளார்கள். மேற்படி கழிப்பிடத்தினை நகர்மன்ற தலைவர் அவர்கள், ஆணையாளர் மற்றும்

பொறியாளர் ஆகியோர்கள் நேரடி ஆய்வு செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தேவையான பொருட்கள் அமைக்க உத்திரவிடப்பட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் சமுதாய கழிப்பிடத்தில் Driyer, Napkin. Vending Machine, Incinerator மற்றும் இதர பயன்பாட்டு பொருட்கள் சப்ளை செய்து பொருத்தும் பணியினை மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ.1.90/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 416, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–16**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.25ல் அண்ணா நகர் முதல் பிரதான சாலையில் மிகை மழைநீர் உந்து நிலைய கிணறுக்கு இரும்பு மூடி, இணைப்பு சிமெண்ட் குழாய் மற்றும் Grill Gate அமைக்கும் பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.1.70/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.417, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் எண்– 17**

செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் பருவ கால நோய் தடுப்பு நடவடிக்கைகள், தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு பணிகளுக்கு தேவையானவற்றை 2024–25–ம் நிதியாண்டிற்கு வருடாந்திர ஒப்பந்தப்புள்ளிகள் கோரி அதன் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினங்களை நகராட்சியின் வருவாய் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு பொது சுகாதாரப்பிரிவில் பல்வேறு அத்தியவசிய பணிகளுக்கு துரித நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தினசரி பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்படும் பத்திரிக்கை நிறுவனங்களுக்கு ஆகும் செலவினம். | 2.00 |
| 2 | பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் பினாயில் வாங்கும் பணி. | 2.00 |

**அலுவலக குறிப்பு—**

1. மதிப்பீட்டு தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 2024 – 25—ம் நிதியாண்டில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.418, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்—18**

செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் (SWM) 2016—ன் கீழ், இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட 33 வார்டு பகுதிகளிலும் தினசரி உருவாகும் 21.02 மெ.டன் அளவிலான குப்பைகளை அனைத்து வீடுகளிலும், வணிக நிறுவனங்களிலும் உருவாகும் குப்பைகள், பேருந்து செல்லும் முக்கிய வழித்தடங்களில் தெருக்கள் பெறுக்குதல் போன்ற குப்பைகளை அகற்றும் பணி போன்றவற்றை செயல்திறன் குறிப்பீட்டு அளவு (Key Performance Indicator) கணக்கீட்டின்படி மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என தரம் பிரித்து பசுமை உரக்குடியில் (MCC) மற்றும் உலர் கழிவுகள் சேகரிப்பு மையம் (RRC) ஆகிய செயலாக்கம் செய்யும் மையங்களில் சேர்ப்பிக்கப்பட்டு உரமாக்கும் பணி மற்றும் உலர்க்கழிவுகளை கட்டுக்கட்டும் பணி போன்றவை SSV Developers விழுப்புரம் என்ற நிறுவனத்தின் மூலம் கடந்த 01.05.2023 முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் 30.04.2024 உடன் ஓராண்டு காலம் நிறைவடைகிறது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்தரவின்படி மூன்றாண்டு கால ஒப்பந்த காலம் இருந்தபோது ஒப்பந்ததாரர் SSV Developers விழுப்புரம் அவர்களுக்கு ஓராண்டு காலத்திற்கு பணியினை நீட்டிப்பு செய்ய வழங்குமாறு விண்ணபத்தில் தெரிவித்துள்ளார். மேலும் தேதி 28.06.2024 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி ஒப்பந்ததாரருக்கு பணியினை 3 மாதங்களுக்கு மட்டும் 01.05.2024 முதல் 31.07.2024 வரை பணியினை நீட்டிப்பு செய்து அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டவாறு 33 வார்டுகளிலும் வீடுகள் கடைகளில் தினமும் குப்பைகள் பிரித்து வாங்குவதை உறுதி செய்யும் வகையில் அன்றாடம் பிரித்து வாங்கும் குப்பைகளின் அளவை எடை போட்டு ஒவ்வொரு நாளும் KPIன்படி ANNEXURE III உடன் இணைத்து பிரதான சாலைகள் பேருந்து நிலையம், மார்க்கெட் பகுதியில் இரண்டு வேளை குப்பைகளை பெறுக்குவதை உறுதிப்படுத்திடவும் ஒப்பந்த விலையில் கூறிய அனைத்து ஷரத்துகளும் பின்பற்றி தற்போது வரை எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் பணி மேற்கொண்டு வருகின்றனர்.

போதிய வாகனங்களுடன் பணியாளர்கள் (ஓட்டுநர் மேற்பார்வையாளர்கள் ஏற்படுத்தி ஒப்பந்த விதிகளை பின்பற்றி பணி செய்ய வேண்டிய நிபந்தனைகளுடன் காலநீட்டிப்பு செய்திடவும் மேலும் தேர்தல் நடத்தை விதி அமுலில் உள்ளதாலும் நகர்மன்றம் கூடாததாலும் நகரமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், திடக்கழிவு மேலாண்மை பணியின் முக்கியத்துவம் கருதியும் மேலும் ஓராண்டு கால ஒப்பந்த நீட்டிப்பு செய்திடவும் அதற்கான உத்தேச செலவினம் 10% கூடுதலாக உயர்த்தி வழங்குதல் உட்பட 21.02 X 3885.50=

81.673.21 X 31 நாட்கள் =25.31.869X3 மாதங்கள் =**75.95.608.53** X 10%+759560.85 X19% GST = 144.316.56 = 82.10.852.82/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. **01.05.2024** முதல் **06.06.2024** முடிய பணி மேற்கொண்டதற்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
3. **07.06.2024** முதல் **31.07.2024** முடிய பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொண்டதற்கு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 419, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு **1** முதல் **3** வரை அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–19**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட **33** வார்டுகளில் கொசுபுழு ஒழிப்பு பணியினை மேற்கொள்ள போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தால் M/s.AMR Electrical Engineering Constractor வேலூர் என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் DBC பணியாளர்களை வெளிகொணார்வு முறையில் (Out Sourcing) பணியமர்த்தி பணி நடைப்பெற்று வருகிறது. இதற்கு மன்ற தீர்மான எண்.**147** நாள்.**05.11.2023** முதல் **04.02.2024** வரை நிர்வாக அனுமதியும் பெறப்பட்டதை தொடர்ந்து மேற்படி ஒப்பந்ததாரரின் பணிக்காலம் வரும் **04.02.2024** உடன் முடிவடைவதால் மேலும் **05.02.2024** முதல் **29.02.2024** வரை பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் நாள்.**01.03.2024** முதல் **30.04.2024** வரை இரண்டு மாதங்களுக்கு ஆணையர் அவர்களின் அறிவுரைபடி பணி மேற்கொள்ளப்பட்டது மற்றும் **01.05.2024** முதல் **06.06.2024** வரை தேர்தல் நடத்தை விதி முடித்தவுடன் வரும் நகர்மன்ற கூட்டத்தில் அனுமதி பெறவும் என ஆணையர் அவர்களின் அறிவுரைபடி பணி மேற்கொள்ளப்பட்டது. எனவே வரும் காலங்களில் இந்நகராட்சி பகுதிகளில் டெங்கு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளுவதற்கு DBC பணியாளர்கள் தேவைப்படுகிறது. பொது சுகாதாரப் பிரிவில் தொய்வின்றி பணிகள் நடைபெறுவதற்கும் மற்றும் நிர்வாக நலன் கருதியும் **01.06.2024** முதல் **31.08.2024** வரை **89** நாட்களுக்கு இப்பணியினை ஏற்கனவே பணி மேற்கொண்டு வரும் M/s.AMR Electrical Engineering Contractor அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினசரி விலை விகிதத்தில் பணி நீட்டிப்பு செய்து கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**27.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1574/2024/எச்1)**

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி **01.06.2024** முதல் **31.08.2024** வரை **3** மாத காலங்களுக்கு M/s.AMR Electrical Engineering Contractor நிறுவனத்தின் மூலம் தற்போது பணி மேற்கொண்டு வரும் அதே விலைப்புள்ளி விகிதத்தில் பணி மேற்கொள்வதற்கு மன்றம் ஏற்கலாம்.
3. **01.03.2024** முதல் **30.04.2024** வரை பணி மேற்கொண்டதற்கு பின்னேற்பு வழங்கலாம்.

4. 01.06.2024 மாதத்திற்கு ஊதியம் வழங்க தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 420, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு 1 முதல் 4 வரை அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்.20**

இந்நகராட்சி பகுதிகளில் உள்ள பொது மற்றும் சமுதாயக் கழிப்பிடங்கள், பேருந்து நிலையங்களில் உள்ள கழிப்பிடங்கள் ஆகியவற்றை சுத்தம் செய்து அதற்கான வாசனை மற்றும் கிருமி நாசினியாக Lemon Grass oil வாங்கி தெளிக்கவும் இதற்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 421, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–21**

செங்கல்பட்டு நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு உபகரணங்கள் தலைகவசம், கையுறை, முக கவசம், காலுறை வழங்கவும் மற்றும் பயன்படும் பொருட்கள் கத்தி, கடப்பாறை, மண்வெட்டி, கரண்டி, கை ஒடு மண் அள்ளும் சவல், கூடை மற்றும் தென்னை தொடப்பம், குப்பை இழுக்கும் ஊக்கு போன்ற அனைத்தையும் வாங்குவதற்கான தோராய செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண். 422, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்– 22**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.07 முதல் 33 வரையுள்ள வார்டுகளுக்கு தெருவிளக்குகள் பராமரிக்கும் பணியானது இவ்வலுவலக வேலை உத்திரவு ந.க.எண்.0446/2020/இ2, நாள்.30.04.2024ன் படி வேலை உத்திரவு வழங்கப்பட்டு கால நீட்டிப்புடன் பராமரிப்பு பணிகள் நடைப்பெற்று வருகிறது. மேற்படி காலநீட்டிப்பானது 30.04.2024 அன்றுடன் முடிவடையவுள்ளது. தற்போது நாடாளுமன்ற தேர்தல் (2024) நடத்தை விதிகள் அமலில் உள்ளது. LED விளக்குகள் மாற்றியமைக்கும் (Conversion) பணிகளும் நடைபெற்று வருகிறது. இச்சூழ்நிலையில் பராமரிப்பு பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரிட சாத்தியம் இல்லாததால் தற்போது பராமரிப்பு பணியினை மேற்கொண்டு வரும் திருவாளர்.AMR Electrical Engineering Contractor மூலம் ஏற்கனவே மேற்கொண்ட ஒப்பந்தவிலைகளின் அடிப்படையில் 30.07.2024 வரை அல்லது தற்போது முன்னேற்றத்தில் உள்ள LED விளக்குகள் மாற்றியமைக்கும் பணியானது முற்றிலும் முடிவுற்று அந்நிறுவனத்தால் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும் வரை

இப்பராமரிப்பு பணியினை **01.05.2024** முதல் **06.06.2024** வரை பணி மேற்கொண்டமைக்கு பின்னேற்பும் **07.06.2024** முதல் **31.07.2024** வரை காலநீட்டிப்பு செய்து பணியினை மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.**11.50** இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. 01.05.2024 முதல் 06.06.2024 முடிய பணி மேற்கொண்டதற்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
3. 07.06.2024 முதல் 31.07.2024 முடிய பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொண்டதற்கு அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.0446/2020/இ2**

**தீர்மான எண்.423, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு **1** முதல் **3** வரை அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–23**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாசித்தெரு நீர்தேக்க தொட்டி, பெரியமணியக்கார தெரு நீர்தேக்க தொட்டி, கே.கே.பூஸ்டர், ரேடியோமலை நீர்தேக்க தொட்டி, சப்–கலெக்டர் பங்களா நீர்தேக்க தொட்டி மற்றும் தட்டான்மலை (வடமலை பள்ளி அருகில்) உள்ள தடைமட்ட மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் நீர்நிரப்பும் பணிகள் மேற்கொள்ளும் மின்மோட்டார்கள், கேபிள்கள், வால்வுகள், GI & HDPE பைப்லைன்கள், மெயின் ஸ்விட்ச், Service wireகள் மற்றும் மின்கேபிள்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டி **2024–25–ம்** ஆண்டு பராமரிப்பு பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.**6.80** இலட்சத்திற்கு இப்பணியினை குடிநீர் நிதி **2024 – 25**ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 424, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–24**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.**29**ல் புது ஏரி பிள்ளையார் கோவில் அருகில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கல்வெட்டு அமைக்கும் பணியினை மேற்கொண்டு தருமாறு நகரமன்ற உறுப்பினர் அவர்கள் மனு மூலம் கோரியுள்ளார்கள். மேற்படி இடத்தினை நகர்மன்ற தலைவர் அவர்கள், ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர்கள் நேரடி ஆய்வு செய்து பணியினை மேற்கொள்ளுமாறு உத்திரவிடப்பட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் வார்டு எண்.**29**ல் புது ஏரி பிள்ளையார் கோவில் தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணியினை

மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ.2.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.425, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–25**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட மாமண்டூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 160KV ஜெனரேட்டர் பழுதடைந்து உள்ளதை சீரமைத்து பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.0.80/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண்.426, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–26**

செங்கல்பட்டு நகராட்சி மாமண்டூர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள நீர்தேக்க தொட்டி பம்பு ரூமில் ஆழ்துளை கிணறு (Bore well) மற்றும் உறுஞ்சி கிணறுகளில் உள்ள HDPE பைப் லைன் மற்றும் கேபிள்கள், வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டி 2024–25ம் ஆண்டு பராமரிப்பு பணிக்கு ரூ.12.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு குடிநீர் நிதி 2024–2025ன் கீழ் இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.427, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–27**

செங்கல்பட்டு நகராட்சி பழவேலி தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள ரேடியோமலை நீர்தேக்க தொட்டி பம்பு ரூமில் ஆழ்துளை கிணறு (Bore well) மற்றும் உறுஞ்சி கிணறுகளில் உள்ள HDPE பைப் லைன் மற்றும் கேபிள்கள், வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டி 2024–25ம் ஆண்டு பராமரிப்பு பணிக்கு ரூ.12.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு குடிநீர் நிதி 2024–2025ன் கீழ் இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.428, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–28**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.29ல் புது ஏரி பகுதியில் பிள்ளையார் கோவில் தெரு, மதுரை வீரன் கோவில் தெரு மற்றும் குறுக்கு தெருக்களில் அடைப்புகள் ஏற்பட்டுள்ள குடிநீர் பகிர்மான குழாய்களை மாற்றி புதிதாக குடிநீர் குழாய் அமைத்தும் குடிநீர் இணைப்புகள் உள்ள வீடுகளுக்கு இணைப்புகள் மாற்றி அமைக்கும் பணிக்கு தோராய மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 429, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–29**

செங்கல்பட்டு நகராட்சியில் ஆட்கள் பற்றாக்குறையின் காரணமாக வெளிகொணர்வு முறையில் 4 தட்டச்சர் மற்றும் 3 தொழில்நுட்ப பணியாளர்கள் அமர்த்தி பணியினை மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்.328, நாள்.29.12.2023ன் படி திரு.பகவான் அன் கோ ஒப்பந்ததாரர் மூலம் பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணியின் ஒப்பந்த காலம் பிப்ரவரி – 2024 முடிவடைகிறது. தற்போது நாடாளுமன்ற தேர்தல் அறிவிப்பு வரும் நிலையில் ஒப்பந்தப்புள்ளி கோர கால அவகாசம் இல்லாத காரணத்தினால் ஏற்கனவே பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்த விலை விகிதத்தில் மதிப்பீட்டு தொகை ரூ.7.00 இலட்சத்தில் 3 மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்ய நகர்மன்ற தீர்மான எண்.399 நாள்.14.03.2024ல் அனுமதி பெறப்பட்டு பணி நடைப்பெற்று வருகிறது. மேலும் பாராளுமன்றம் 2024 தேர்தல் விதிகள் 16.03.2024 முதல் 07.06.2024 வரை நடைமுறையில் இருந்து வந்தது. மேற்படி விதிகள் 07.06.2024 அன்றுடன் முடிவடைந்துள்ளதால் மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி அடுத்த ஒப்பந்ததாரரை முடிவு செய்யும் வரை ஏற்கனவே இப்பணியினை மேற்கொண்டு வரும் திருவாளர்.பகவான் அன் கோ நிறுவனத்திற்கு ஏற்கனவே மேற்கொண்டு வரும் பழைய ஒப்பந்த விலை விகிதத்தின்படி ஏற்கனவே அனுமதி பெறப்பட்ட மதிப்பீட்டில் மீதமுள்ள மதிப்பீடு தொகையில் 01.6.2024 முதல் 30.06.2024 வரை பணி

மேற்கொண்டமைக்கு பின்னேற்பும் **01.07.2024** முதல் **31.08.2024** வரை கால நீட்டிப்பு செய்த பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.**4.00** இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. **16.03.2024** முதல் **06.06.2024** முடிய பணி மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
3. **07.06.2024** முதல் **31.08.2024** முடிய பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொண்டதற்கு அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.159/2023/இ1

**தீர்மான எண். 430, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு 1 முதல் 3 வரை அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–30**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம், அண்ணாசாலை, திருக்கழுக்குன்றம் ரோடு மற்றும் ராஜேஸ்வரி வேதாசல வணிக வளாகம் ஆகிய பகுதிகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான 95 மாதந்திர குத்தகை இனங்களுக்கு தற்போதைய வாடகை மதிப்பீடல் அரசாணை (நிலை) எண்.92, நாள்.03.07.2007 / நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை)–ன் படி கீழ்காணும் கடைகளுக்கு 3 ஆண்டுகள் முடிவுற்றதை தொடர்ந்து கீழ்காணும் விவரப்படி 15% உயர்வு செய்து வாடகை மறு நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**இதன் விவரங்களை கீழ்கண்டவாறு தெரிவிக்கிறேன்:**

**9 ஆண்டு குத்தகைகள்–**

| வ எண் | வரி விதிப்பு எண் | குத்தகை இனம் | சதுர அடி | தற்போதைய வாடகை | கடைசியாக செலுத்திய மாத வாடகை குறைவாக உள்ளதால் வரி 15% உயர்வு செய்த பிறகு |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | 018/1129 | BUNK SHOP 02 | 130 | 575 | 661 |
| 2 | 018/1147 | ANNA SALAI SHOP NO.3 | 80 | 1782 | 2049 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 018/1146 | ANNA SALAI SHOP NO.2 | 80 | 1782 | 2049 |
| 4 | 018/BD01/00026 | ANNA SALAI SHOP NO.5 | 80 | 1783 | 2050 |
| 5 | 018/1142 | ANNA SALAI SHOP NO.6 | 80 | 1783 | 2050 |
| 6 | 018/BD01/00036 | ANNA SALAI SHOP NO.7 | 80 | 1783 | 2050 |
| 7 | 018/1151 | ANNA SALAI SHOP NO.8 | 80 | 1783 | 2050 |
| 8 | 018/1140 | ANNA SALAI SHOP NO.9 | 80 | 1783 | 2050 |
| 9 | 018/BD01/00027 | ANNA SALAI SHOP NO.10 | 49 | 1783 | 2050 |
| 10 | 018/BD01/00013 | ANNA SALAI SHOP NO.1 | 80 | 1783 | 2050 |
| 11 | 018/1087 | ANNA SALAI SHOP NO.4 | 100 | 1783 | 2050 |
| 12 | 018/BD01/00014 | ANNA SALAI SHOP NO.11 | 49 | 1783 | 2050 |
| 13 | 018/1144 | ANNA SALAI SHOP NO.12 | 56 | 1783 | 2050 |
| 14 | 018/BD01/00016 | RAJESWARI VEDHACHALAM COMPLEX SHOP NO.19 | 100 | 1783 | 2050 |
| 15 | 018/1081 | RAJESWARI VEDHACHALAM COMPLEX SHOP NO.20 | 100 | 1783 | 2050 |
| 16 | 018/1082 | RAJESWARI VEDHACHALAM COMPLEX SHOP NO.21 | 100 | 1783 | 2050 |
| 17 | 018/1078 | RAJESWARI VEDHACHALAM COMPLEX SHOP NO.17 | 100 | 1783 | 2050 |
| 18 | 018/1079 | RAJESWARI VEDHACHALAM COMPLEX SHOP NO.18 | 100 | 1783 | 2050 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19 | 018/1080 | RAJESWARI VEDHACHALAM COMPLEX SHOP NO.19 | 100 | 1783 | 2050 |
| 20 | 018/1083 | RAJESWARI VEDHACHALAM COMPLEX SHOP NO.22 | 100 | 1783 | 2050 |
| 21 | 018/1141 | RAJESWARI VEDHACHALAM COMPLEX SHOP NO.16 | 500 | 1783 | 2050 |
| 22 | 018/1126 | BUNK SHOP 01 | 100 | 2300 | 2645 |
| 23 | 018/BD01/00018 | THIRUKALUKUNDRAM ROAD SHOP NO-3 | 80 | 2415 | 2777 |
| 24 | 018/1110 | THIRUKALUKUNDRAM ROAD SHOP NO-4 | 100 | 2415 | 2777 |
| 25 | 018/BD01/00017 | THIRUKALUKUNDRAM ROAD SHOP NO-5 | 80 | 2415 | 2777 |
| 26 | 018/BD01/00028 | THIRUKALUKUNDRAM ROAD SHOP NO-2 | 80 | 2415 | 2777 |
| 27 | 018/1138 | NEW BUSSTANDSHOP NO -12 | 100 | 3220 | 3703 |
| 28 | 018/1014 | NEW BUSSTANDSHOP NO -13 | 100 | 3220 | 3703 |
| 29 | 018/BD01/00019 | NEW BUSSTANDSHOP NO -14 | 100 | 3220 | 3703 |
| 30 | 018/1016 | NEW BUSSTANDSHOP NO -15 | 200 | 3220 | 3703 |
| 31 | 018/1019 | NEW BUSSTANDSHOP NO -17 | 88 | 3220 | 3703 |
| 32 | 018/1020 | NEW BUSSTANDSHOP NO -18 | 88 | 3220 | 3703 |
| 33 | 018/1074 | RAJESWARI VEDHACHALAM COMPLEX SHOP NO.13 | 100 | 3278 | 3770 |
| 34 | 018/1045 | OLD BUSSTANDSHOP NO - 5 | 49 | 3450 | 3967 |
| 35 | 018/1136 | OLD BUSSTANDSHOP NO - 7 | 518 | 3450 | 3967 |
| 36 | 018/1046 | OLD BUSSTANDSHOP NO - 6 | 49 | 3450 | 3967 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 37 | 018/1043 | OLD BUSSTANDSHOP NO - 3 | 88 | 3450 | 3967 |
| 38 | 018/1048 | OLD BUSSTANDSHOP NO - 8 | 400 | 3450 | 3967 |
| 39 | 018/1050 | OLD BUSSTANDSHOP NO - 10 | 70 | 3450 | 3967 |
| 40 | 018/1051 | OLD BUSSTANDSHOP NO - 11 | 77 | 3450 | 3967 |
| 41 | 018/1052 | OLD BUSSTANDSHOP NO - 12 | 100 | 3450 | 3967 |
| 42 | 018/1044 | OLD BUSSTANDSHOP NO - 4 | 88 | 3450 | 3967 |
| 43 | 018/1049 | OLD BUSSTANDSHOP NO - 9 | 350 | 3450 | 3967 |
| 44 | 018/1066 | RAJESWARI VEDHACHALAM COMPLEX SHOP NO.5 | 100 | 3507 | 4033 |
| 45 | 018/1063 | RAJESWARI VEDHACHALAM COMPLEX SHOP NO.2 | 100 | 3508 | 4034 |
| 46 | 018/1070 | RAJESWARI VEDHACHALAM COMPLEX SHOP NO.9 | 100 | 3508 | 4034 |
| 47 | 018/1067 | RAJESWARI VEDHACHALAM COMPLEX SHOP NO.6 | 100 | 3508 | 4034 |
| 48 | 018/1072 | RAJESWARI VEDHACHALAM COMPLEX SHOP NO.11 | 100 | 3508 | 4034 |
| 49 | 018/1069 | RAJESWARI VEDHACHALAM COMPLEX SHOP NO.8 | 100 | 3508 | 4034 |
| 50 | 018/BD01/00011 | RAJESWARI VEDHACHALAM COMPLEX SHOP NO.4 | 49 | 3508 | 4034 |
| 51 | 018/BD01/00012 | RAJESWARI VEDHACHALAM COMPLEX SHOP NO.3 | 49 | 3508 | 4034 |
| 52 | 018/BD01/00025 | THANTHAI PERIYAR COMPLEX SHOP NO. 3 | 100 | 3680 | 4232 |
| 53 | 018/BD01/00024 | THANTHAI PERIYAR COMPLEX SHOP NO 04 | 100 | 3680 | 4232 |
| 54 | 018/BD01/00023 | THANTHAI PERIYAR COMPLEX SHOP NO 05 | 100 | 3680 | 4232 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 55 | 018/BD01/00022 | THANTHAI PERIYAR COMPLEX SHOP NO 06 | 100 | 3680 | 4232 |
| 56 | 018/BD01/00021 | THANTHAI PERIYAR COMPLEX SHOP NO.07 | 100 | 3680 | 4232 |
| 57 | 018/1096 | ANNA SALAI SHOP NO.13 | 100 | 3738 | 4298 |
| 58 | 018/1012 | NEW BUSSTANDSHOP NO -11 | 100 | 3795 | 4364 |
| 59 | 018/1075 | RAJESWARI VEDHACHALAM COMPLEX SHOP NO.14 | 100 | 3795 | 4364 |
| 60 | 018/1027 | NEW BUSSTANDSHOP NO -25 | 88 | 4198 | 4827 |
| 61 | 018/1026 | NEW BUSSTANDSHOP NO -24 | 88 | 5003 | 5753 |
| 62 | 018/1150 | NEW BUSSTANDSHOP NO -2 | 100 | 5060 | 5819 |
| 63 | 018/1004 | NEW BUSSTANDSHOP NO -3 | 100 | 5060 | 5819 |
| 64 | 018/1005 | NEW BUSSTANDSHOP NO -4 | 100 | 5060 | 5819 |
| 65 | 018/1008 | NEW BUSSTANDSHOP NO -7 | 100 | 5060 | 5819 |
| 66 | 018/1009 | NEW BUSSTANDSHOP NO -8 | 100 | 5060 | 5819 |
| 67 | 018/1010 | NEW BUSSTANDSHOP NO -9 | 100 | 5060 | 5819 |
| 68 | 018/1007 | NEW BUSSTANDSHOP NO -6 | 100 | 5060 | 5819 |
| 69 | 018/1006 | NEW BUSSTANDSHOP NO -5 | 100 | 5060 | 5819 |
| 70 | 018/1149 | OLD BUSSTANDSHOP NO - 2 | 80 | 5865 | 6745 |
| 71 | 018/1035 | NEW BUSSTANDSHOP NO -33 | 88 | 6268 | 7208 |
| 72 | 018/1039 | NEW BUSSTANDSHOP NO -37 | 90 | 6318 | 7265 |
| 73 | 018/1038 | NEW BUSSTANDSHOP NO -36 | 88 | 6385 | 7342 |
| 74 | 018/1034 | NEW BUSSTANDSHOP NO -32 | 88 | 6440 | 7406 |
| 75 | 018/1031 | NEW BUSSTANDSHOP NO -29 | 88 | 7188 | 8266 |
| 76 | 018/BD01/00029 | NEW BUSSTANDSHOP NO -20 | 88 | 7245 | 8331 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 77 | 018/1024 | NEW BUSSTANDSHOP NO -22 | 88 | 7245 | 8331 |
| 78 | 018/1252 | NEW BUSSTANDSHOP NO -21 | 80 | 7245 | 8331 |
| 79 | 018/1028 | NEW BUSSTANDSHOP NO -26 | 88 | 7360 | 8464 |
| 80 | 018/1029 | NEW BUSSTANDSHOP NO -27 | 88 | 7475 | 8596 |
| 81 | 018/1021 | NEW BUSSTANDSHOP NO -19 | 88 | 7820 | 8993 |
| 82 | 018/1036 | NEW BUSSTANDSHOP NO -34 | 88 | 8395 | 9654 |
| 83 | 018/1037 | NEW BUSSTANDSHOP NO -35 | 88 | 8395 | 9654 |
| 84 | 018/1040 | NEW BUSSTANDSHOP NO -38 | 88 | 9200 | 10580 |
| 85 | 018/1130 | NEW BUSSTANDSHOP NO -23 | 88 | 9200 | 10580 |
| 86 | 018/1032 | NEW BUSSTANDSHOP NO -30 | 88 | 10695 | 12299 |
| 87 | 018/1054 | PERIYAR SHOPPING COMPLEX -2 | 80 | 11500 | 13225 |
| 88 | 018/1033 | NEW BUSSTANDSHOP NO -31 | 88 | 19780 | 22747 |
| 89 | 018/1132 | OLD BUSSTANDSHOP NO - 1 | 88 | 21275 | 24466 |
| 90 | 018/1002 | NEW BUSSTANDSHOP NO -1 | 100 | 23058 | 26517 |
| 91 | 018/1053 | PERIYAR SHOPPING COMPLEX -1 | 80 | 59800 | 68770 |
| 92 | 018/BD01/00030 | NEW BUSSTANDSHOP NO -39 | 110 | 67500 | 77625 |
| 93 | 018/BD01/00003 | NEW BUSSTANDSHOP NO -28 | 130 | 24050 | 27657 |
| 94 | 018/BD01/00009 | NEW BUSSTANDSHOP NO -17 | 88 | 18330 | 21079 |
| 95 | 018/1148 | NEW BUSSTANDSHOP NO -10 | 100 | 13583 | 15620 |

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1055/2024/அ1**

**தீர்மான எண். 431, நாள். 10.07.2024**

இப்பொருளில் வரிசை எண்.**1** முதல் **95** வரையிலான வரி விதிப்பு கொண்ட குத்தகை இனகடைகளில் வரிசை எண்.**14** முதல் **21** வரை **33** மற்றும் வரிசை எண்.**44** முதல் **51** வரை **59**ல் கண்டுள்ள ஆக மொத்தம் மேலே குறிப்பிட்டுள்ள **18** கடைகளானது ராஜேஸ்வரி வேதாசலம்

காம்ளக்ஸில் மிகவும் பழமையானதாகவும் பழுதுப்பட்ட நிலையில் இருப்பதால் இக்கடைகளை இடித்து அப்புறப்படுத்தி விட்டு மீண்டும் புது கடைகள் கட்டி நகராட்சி விதிகளின் படி குத்தகைக்கு விட ஏற்கனவே 15வது வார்டு நகர மன்ற உறுப்பினர் கொண்டு வரப்பட்ட பொருளின் அடிப்படையில் மன்ற தீர்மான எண்.53, நாள்.27.04.2023ல் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி தற்போது இக்கடைகளுக்கு மட்டும் 15% சதவீதம் வரி உயர்வு மேற்கொள்வது பொருந்தாது என தீர்மானிக்கப்பட்டது. மேலும் வரிசை எண். 1 முதல் 13 வரையிலான கடைகளுக்கும் மற்றும் 22 முதல் 32 வரையிலான கடைகளுக்கும் மற்றும் வரிசை எண்.34 முதல் 43 மற்றும் கடை எண்.52 முதல் 58 வரையிலான கடைகளுக்கும் மற்றும் 60 முதல் 95 வரையிலான கடைகளுக்கு மட்டும் 15% சதவீதம் வரி உயர்வு செய்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்–31**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பேருந்து நுழைவு கட்டணம், மாமர குத்தகை, வேன் மற்றும் லாரி நுழைவு கட்டணம் சமுதாய கூடம், கூவி விற்போர் வசூல் கட்டணம், ஆடு அறுக்கும் தொட்டி வசூல் கட்டணம் மற்றும் மீன் அங்காடி ஆகிய இனங்களுக்கு 3 ஆண்டு குத்தகை காலம் 31.03.2024 அன்று முடிந்தது. மேற்படி காலம் தேர்தல் நடத்தை விதி (Manual code of conduct) அமலில் இருந்ததால் தற்போது முன்பு இனங்களுக்கு குத்தகை பதில் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**வருடாந்திர குத்தகைகள்–**

| வரிசை எண் | குத்தகை இனங்கள் | காலம் | வரி விதிப்பு எண். |
|---|---|---|---|
| 1 | பேருந்து நுழைவு கட்டணம் | 3 ஆண்டுகள் | 018/1201 |
| 2 | மாமர குத்தகை (திம்மாவரம்) | 3 ஆண்டுகள் | 018/BD01/00004 |
| 3 | வேன் (ம) லாரி நுழைவு கட்டணம் | 3 ஆண்டுகள் | 018/LD02/00038 |
| 4 | சமுதாய கூடம் | 3 ஆண்டுகள் | 018/BD01/00035 |
| 5 | கூவி விற்போர் வசூல் கட்டணம் | 3 ஆண்டுகள் | 018/LD02/00006 |
| 6 | ஆடு அறும் தொட்டி வசூல் கட்டணம் | 3 ஆண்டுகள் | 018/BD01/00005 |
| 7 | மீன் சந்தை | 3 ஆண்டுகள் | 018/BD01/00033 |

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1055/2024/அ1**

**தீர்மான எண். 432, நாள். 10.07.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

நகரமன்ற தலைவர்

செங்கல்பட்டு நகராட்சி